[3rd November 1958

Sri A. VEDARATHNAM : இந்த மாநிலத்தில் எவ்வளவு அம்பர் ராட்டுகளை விநியோகிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ? அதை எத்தனை வருடங்களில் பயன்படுத்த உத்தேசம் ? இப்பொழுது ஏற்படுத்தப் பட்டிருக்கிற பரிசிரமாலயங்கள் மூலம் அதற்குப் போதிய நபர்களுக்கு பயிற்சி கொடுக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இன்னும் அதிக பரிசிரமாலயங்கள் தேவையாயிருக்கிறது. அவைகளும் ஏற்பாடு செய்யப் படும். இந்தத் திட்டத்தைப் பரிபூர்ணமாக நிறைவேற்றுவதற்கு மற்ற விவரங்கள், தனியாகக் கேள்வி கேட்டால் சொல்கிறேன்.

Sri V. SUBBIAH : சர்க்காவில் நூற்கும் நூல் சிட்டத்திற்கும், அம்பர் சர்க்காவில் நூற்கும் நூல் சிட்டத்திற்கும் விலை வித்தியாசம் இருக் கிறது. அதேபோல் ஜவுளியிலும் வித்தியாசம் ஏற்படுத்த அரசாங்கம் உத்தரவு இடுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது விலை வித்தியாசம் ஒன்றுமில்லை. ஆனால் இந்தத் திட்டம் மேற்கொண்டு நிறை வேற்றப்பட்ட பிறகு விலை குறைக்கப்படும்.

Veterinary Dispensaries in Tanjore district

* 820.C *Q.*—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many Veterinary Dispensaries were opened in Tanjore district during the last three years and in which places;

(*b*) in how many of these dispensaries there are Veterinary Doctors ;

(*c*) which of these dispensaries are without doctors;

(*d*) the period during which there have been no Veterinary Doctors in these dispensaries and the reasons therefor ; and

(*e*) the steps that are being taken by Government to remedy the above defect?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 1955–56—three dispensaries one each at Tiruvaiyaru, Orathanad and Konerirajapuram.

1956–57—Nil.

1957–58—One at Valivalam.

(*b*) Veterinary Assistant Surgeons are working in all the above dispensaries.

(*c*) Does not arise.

(*d*) The dispensary at Orathanad was without a Veterinary Assistant Surgeon during the period from 16th March 1956 to 23rd June 1957 and 4th July 1958 to 30th September 1958 and the dispensary at Konerirajapuram was without a Veterinary Assistant Surgeon from 1st November 1956 to 16th September 1957. The posts had to be kept vacant due to dearth of Veterinary Assistant Surgeons.

(*e*) At present there is a shortage of Veterinary Assistant Surgeons in the Animal Husbandry Department and the vacant

3rd November 1958]

posts are being filled up as and when new graduates become available. The number of admissions to the Madras Veterinary College has been increased to 120 from the academic year 1957–58 and out of this the candidates belonging to Madras number about 80. This increase will have real effect only after the first batch of students pass out of the college in 1961–62.

Sri A. VEDARATHNAM: ஸார், இவ்வளவு டாக்டர்கள் இல்லாதபோது பொதுஜனங்களிடமிருந்து நன்கொடை வாங்கி புதிது புதிதாக வெட்டரினரி ஆசுபத்திரிகள் கட்டுவதின் அவசியமென்ன ? அதோடு முன்னால் சில இடங்களில் இருந்த ஒன்றிரண்டு வெட்டரினரி டாக்டர்களையும் இப்போது மாற்றியிருப்பதின் காரணம் என்ன, ? அதோடு சமீபத்தில் வேதாரண்யத்தில் இருந்து வந்த ஒரு வெட்டரினரி டாக்டர் அங்கிருந்து எடுக்கப்பட்டதின் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: வேதாரண்யத்தைப்பற்றி தனிக்கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கிறேன். இப்போது அதிகமாக வெட்டரினரி ஆசுபத்திரி அவசியமாக இருக்கிறது. இதைத் தாமதமின்றி ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. இருக்கின்ற வெட்டரினரி டாக்டர்களை எல்லாம் பல இடங்களுக்கும் போடப்பட்டு வருகிறது. டாக்டர்கள் அதிகமாக கிடைக்காத காரணத்தால் ஸ்டாக்மென்களை நியமித்து வெட்டரினரி டிஸ்பென்ஸரி பல இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

Sri M. C. MUTHUKUMARASWAMY: ஸார், இந்தக் கால் நடை ஆசுபத்திரிகளில் வேலை செய்கின்ற டாக்டர்கள் சில தினங்களில் மட்டும் அங்கு வருகின்ற ஒன்றிரண்டு மாடுகளுக்குச் சிகிச்சை செய்துவிட்டு மற்ற நேரங்களில் சும்மாதான் இருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே அந்த நேரத்தில் இந்த டாக்டர்கள் சுற்றுவட்டாரத்திலுள்ள இடங்களில் போய் கால்நடைகளை எல்லாம் பார்வையிட்டு ஒரு பட்டியல் சர்க்காருக்கு அனுப்பும்படியாகச் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சாதாரணமாக வெட்டரினரி டிஸ்பென்ஸரி இருக்கிற இடங்களில் எல்லாம் டாக்டர்களை நியமித்துவருகிறோம். அவர்கள் எந்த சமயத்திலும் அங்கு வருகின்ற வியாதியுற்ற மாடுகளைக் கவனிப்பதற்காக அங்கேயே இருக்கவேண்டுமென்றிருக்கிறது. இதுதவிர மொபைல் யூனிட் வேறு சுற்றுவட்டாரத்திலுள்ள இடங்களுக்கு போவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri V. SUBBIAH: எம்.பி.பி.எஸ்-களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பளத்தைவிட குறைவாக இருப்பதினால்தான் பி.வி.எஸ்.ஸி. அதாவது வெட்டரினரி டாக்டர்கள் அதிகமாக கிடைப்பதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே இவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அதை ஒப்புக்கொள்ள முடியாது. வெட்டரினரி டாக்டர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைவு என்று சொல்லுவதற்கு இல்லை. அதோடு எம்.பி.பி.எஸ்-படிப்பிற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன்தான் இவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆதலால் இப்போது இவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்குச் சர்க்காருக்கு உத்தேசமில்லை.

Sri A. VEDARATHNAM: ஸார், வேறு சில வைத்தியங்களில் நாட்டு வைத்தியர்களுக்குச் சிகிச்சை செய்ய அனுமதி அளிப்பது போன்று இந்தக் கால்நடை வைத்தியத்திலும் நாட்டுவைத்திய முறையில் பயிற்சி அளித்து சிகிச்சை செய்ய அனுமதி அளிக்கச் சர்க்கார் முன் வருமா ?

[3rd November 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கொஞ்ச காலத்திற்கு முன் கால்நடை நாட்டு வைத்தியம் அதிகமாக இருந்தது. இப்போது அதிகமாக இல்லை என்று சொல்லலாம். இப்போது அதற்காகத் தான் ஸ்டாக்மென்-கோர்ஸ் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Pupil-teacher ratio in elementary schools

820-D *Q*.—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. Viswanathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the pupil-teacher ratio adopted in elementary schools in the State ; and

(*b*) the minimum number of pupils required over and above the strength for a single teacher for appointing an additional teacher?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) 35 pupils in average attendance per teacher.

(*b*) The formula adopted is as follows :—

For the first 35 pupils in average attendance—Ist teacher.

For the second slab of average attendance from 36 and up to 70—2nd teacher.

For the third slab of average attendance from 71 and up to 105—3rd teacher.

And so on in slabs of 35 pupils in terms of overall average attendance.

* **SRI N. K. PALANISAMI** : ஸார், இரண்டு வாத்தியார்கள் இருக்கக்கூடிய ஒரு பள்ளிக்கூடத்தில், அதில் ஒரு வாத்தியார் பெண் வாத்தியாராக இருந்து அவர் மெட்டர்னிட்டி லீவில் போயிருந்தால் அதற்குப்பதிலாக வாத்தியார்கள் போடுவதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியிருக்கும்போது ஒரு வாத்தியாரே 70 பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு படித்துக்கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதையும் சர்க்கார் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவ்விதமொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று நியமிக்க வேண்டும் என்று பொதுக் கொள்கை இருக்கும் போது 35-லிருந்து 70 பிள்ளைகள் வரை இருந்தால் இரண்டு ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று இருப்பதால், 35 மாணவர்களிலிருந்து 70-வது மாணவர்கள் ஆகும் வரையில் ஒரு ஆசிரியரே ஏற்றுக்கொள்வது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத முறையில் இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: பொதுவாக இதைப்பற்றி ஒரு தவறான கருத்து இருந்து வருகிறது. 35 மாணவர்கள் வரை ஒரு ஆசிரியர் போடவேண்டும் என்றும் 70 மாணவர்கள் இருந்தால் இரண்